Diploma course in Agriculture

* 377.*Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Diploma course in Agriculture at the Kudumiamalai Farm near Tiruchirappalli; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை.

(இ) இவ்விறைவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இது ஒரு பெரிய பண்ணையாக இருக்கிற காரணத்தினால் இதில் ஒரு முறை ட்ரெயினிங் கொடுப்பது விவசாயிகளுக்குப் பிரயோசனமாக இருக்கும் என்பதால் அப்படிப்பயிற்சி கொடுக்கும் நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கேள்வி டிப்ளமா கோர்ஸ் பற்றியது. பாலிடெக்னிக் ஒன்று ஆரம்பிக்கப்படுவது தமிழக அரசின் ஆய்வில் இருக்கிறது. அது ஏற்படுத்தப்படும் என்று எண்ணுகிறேன். உலகவங்கி மூலமாக நிதி உதவி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனல் அந்த பாலிடெக்னிக்கில் டிப்ளமா கொடுப்பதற்குப் பதிலாக சாதாரண பயிற்சி கொடுக்கலாம் என்பது அரசின் இப்போதைய உத்தேசமாக இருக்கிறது.

Power Tillers

* 378 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any multipurpose power tillers were tried on experimental basis as a labour saving device in the Aduthurai Farmers Training Centre; and

(*b*) if so, the details thereof?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மக்காச்சோளம் (மெய்ஸ்) பயிருக்கு நிலத்தை உழுது பண்படுத்த "மிட்சுபிஷி" என்கிற ஜப்பான் பவர் டில்லரை பயன்படுத்திப் பார்த்து அதனால் நல்ல பலன் கிடைக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : மக்காச் சோளத்திற்கு நிலத்தைப் பயன்படுத்த ஜப்பான் பவர் டில்லர் நல்ல பலன் அளிக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு ஒரு ஏக்கரா இரண்டு ஏக்கரா நிலத்தைச் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு பயன்படக்கூடிய சின்னக் கருவிகளை, உழுவதற்கும், மற்ற காரியங்களுக்கும் பயன்படுத்த, கண்டுபிடித்து வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பவர் டில்லர் என்பது சிறிய கருவிதான். உழுவதற்குப் பயன்படுவது. ஆனால் அதுகூட மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவதில்லை. காரணம், படித்தவர்கள் அதில் உட்கார்ந்து அதனைச் செலுத்த வசதியில்லாததுதான். நம் விவசாயத் துறை அலுவலர் ஜப்பான் சென்றிருக்கிறார். ஜப்பானுக்கு சென்று அங்கே மினி டிராக்டர் என்பதாக உள்ள சின்ன டிராக்டரில் உட்கார்ந்து செலுத்தும் அமைப்புடன் கூடிய அதை இங்கே அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தயாரிக்க, வாய்ப்பு வசதிகளைக் கண்டறியச் செய்திருக்கிறோம்.

Tractor Training Centre

* 379. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any request has been made to the Union Minister for Food to open a Tractor Training Centre at Kudumiamalai Research Centre about May, 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) மூன்றாவது டிராக்டர் பயிற்சி நிலையத்தை நிறுவ மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. குடுமியாமலை அரசு விதைப்பண்ணை அல்லது அதனை அடுத்த காட்டுப் பகுதியில் இருந்து 400 ஏக்கரா நிலத்தை